# வெ.40 லட்சம் திட்டத்தில் முறைகேடு

# எம்ஏசிசி இன்று விசாரணை




பக்கம் 13

கோலாலம்பூர், ஜன. 31–

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் ஆலோசனை வாரியத்தின் உறுப்பினர் ஒருவர் நாற்பது லட்சம் வெள்ளி மதிப்புள்ள தொழில் திட்டத்தை வழங்குவதில் முறைகேடு செய்துள்ளதாக புகார் கூறப்படுகிறது. அந்த விவகாரம் தொடர்பாக மலேசிய லஞ்ச ஊழல் எதிர்ப்பு ஆணையம் (எம்ஏசிசி) இன்று மாநகர் மன்றத்திடம் விசாரணை நடத்தவுள்ளது.

## வெ.40 லட்சம் திட்டத்தில் முறைகேடு

அந்த விவகாரத்தை மாநகர் மன்றம் விசாரிக்கத் தொடங்கியுள்ளது என்று எம்ஏசிசியின் துணைத் தலைவர் (நடவடிக்கைகள்) டத்தோஸ்ரீ அமாட் குசாய்ரி யஹாயா நேற்று கூறினார்.

அவர்களின் விசாரணையிலிருந்து என்ன தெரிய வருகிறது என்பதைப் பார்க்கப் போகிறோம். என்னுடைய அதிகாரிகள் வெள்ளிக்கிழமையன்று (இன்று) மாநகர் மன்றத்தின் உயர்நெறி பிரிவினருடன் சந்திப்பு நடத்துவார்கள். அந்த விவகாரத்தில் முறைகேடுகளோ, அதிகாரத் துஷ்பிரயோகமோ, லஞ்சஊழலோ நடந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் எம்ஏசிசி புலன்விசாரணையை ஆரம்பிக்கும் என்று அவர் சொன்னார்.

நாற்பது லட்சம் வெள்ளி மதிப்புள்ள குத்தகையொன்றை வழங்குவதில் வாரிய உறுப்பினர் ஒருவர் முறைகேடு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது என்றும் அந்த விவகாரம் தொடர்பில் மாநகர் மன்றம் விசாரணை நடத்துமானால் அதற்கு உதவ எம்ஏசிசி தயாராக உள்ளது என்றும் இம்மாதம் 28ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், எம்ஏசிசி இதுவரை தனது புலன்விசாரணையைத் தொடங்கவில்லை என்று அதன் தலைவர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி தெரிவித்திருந்தார். ஆனால், அன்றைய தினமே மாநகர் மன்றம் புலன்விசாரணையைத் தொடங்கி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

மாநகர் மன்றத்தின் உயர்நெறிப் பிரிவுடன் இணைந்து விசாரணைக்கு உதவி வருவதாக மேயர் டத்தோஸ்ரீ மைமூனா முகமது ஷரிப் கூறியுள்ளார்.